நகராட்சி அலுவலகம்,
புன்செய்ப்புளியம்பட்டி.

ந.க. எண்.1841/2020/ இ1 நாள்.10.12.2021

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சி ஆணையாளர் அல்லது அவரது அங்கீகாரம் அளிக்கப்பட்ட அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்கண்ட பணிகள் செய்ய 28–12–2021 ம் தேதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அதே தேதியில் மாலை 3.30 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 27–12–2021–ம் தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணி வரை புன்செய் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். வேலைக்கான முன் வைப்புத்தொகையை ஆணையாளர், புன்செய் புளியம்பட்டி நகராட்சி என்ற பெயரில் வங்கி வரைவோலையாகவோ அல்லது ரொக்கமாகவோ செலுத்திய ரசீது இணைத்து வழங்க வேண்டும்.

மற்ற விபரங்களை நகராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தினம் எதிர்பாராத விதமாக விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டிருப்பின், அடுத்த வேலை நாளில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்தப்புள்ளியை நிர்வாக காரணங்களின் நிமித்தம் ஒத்தி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ நகராட்சி ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி நமூனா விலை ரூ | வேலை முடிக்க வேண்டிய கால அளவு | ஒப்பந்த தாரர் தகுதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | **15வது மத்திய நிதிக்குழு மானியம் 2020 - 2021**<br>புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள், பம்புகள், Starter, MV Panels மற்றும் வால்வுகள் ஆகியவற்றிற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளளுதல் | 9.60 | 9600.00 | 1747.00 | 3 மாதம் | IV – வகுப்பு |

**நிபந்தனைகள்**

1. புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி ஆணையாளர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.
2. ஏற்கனவே நகராட்சியின் பணிகள் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
3. ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிட்ட உறையில் வேலையின் பெயர் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயர், முகவரி தெளிவாக எழுதி சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஒப்பந்தப்புள்ளியில் அடித்தல் திருத்தல் இருந்தால் அதனை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் கையொப்பமிட்டு உறுதி செய்தல் வேண்டும்.
5. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் காரணம் ஏதும் இன்றி நிராகரிக்க ஆணையாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட வேலைகளுக்கான விவரங்களை அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
6. பணி துவங்குவதற்கு முன்னர் ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் நகராட்சி ஆணையாளருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.
7. பணி செய்து முடித்தவுடன் அளவுகள் மற்றும் மேலளவுகள் செய்து அளவுப்புத்தகத்துடன் பட்டியல் தயாரித்த பின்னர் நகராட்சியில் தொகை பட்டுவாடா செய்யப்படும்.
8. ஒவ்வொரு பணிக்கும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ள டேவணித் தொகையை ரொக்கமாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ ஆணையாளர், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி என்ற முகவரிக்கு செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்கு செல்லத்தக்கது.
9. ஒப்பந்தப்புள்ளி ஏற்பளிக்கப்பட்ட படிவத்தில் பிணை வைப்புத் தொகையின்றி அனுப்பப்பட்டதை நடவடிக்கையின்றி தள்ளுபடி செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.
10. ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி மன்ற ஒப்புதலுக்கு பிறகு வேலைக்கான உத்திரவு வழங்கப்படும்.
11. வேலைகள் குறிப்பிட்ட காலத்தில் செய்து முடிக்க தவறினால் அவர்களால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத்தொகை (Deposit) பறிமுதல் செய்யப்படுவதுடன் குறிப்பிட்ட வேலைக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடருந்து வசூலிக்கப்படும்.
12. பணியினை மேற்கொள்ள உத்தரவு வழங்கும் போது அப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் 1 % தொகைக்கான கட்டிடத் தொழிலாளர் பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

13. ஒப்பந்தப்புள்ளி வேலைகளுக்காக செலுத்தப்படும் வைப்புத் தொகை தணிக்கை முடிந்து தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் திருப்பி வழங்கப்படும்.தணிக்கைத்தடை ஏற்படுமாயின் குறிப்பிட்டுள்ள தொகையை தாங்கள் பிற பணிகளுக்காக செலுத்திய வைப்புத்தொகையிலிருந்தும் பிடித்தம் செய்யப்படும்.
14. பணிகளுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களிடம் பெற்று தரமான முறையில் செய்து முடிக்க வேண்டும்.
15. பணிகளுக்கு தேவைப்படும் பொருட்கள் தரமானதாக கொள்முதல் செய்து பயன்படுத்த வேண்டும்.
16. பணிகள் முடிந்து உத்திரவாத காலத்திற்குள் சேதமடைந்தால் ஒப்பந்ததாரரே சொந்த செலவில் சரிசெய்து தரவேண்டும்.
17. பணி ஆரம்பிக்கும் முன்னரும், பணியின் ஒவ்வொரு கட்டத்திலும், பணி முடிவுற்ற பின்னரும் புகைப்படம் ஒப்பந்ததாரர் செலவிலேயே எடுத்து நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆணையாளர், 10/12/2024
புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சி.

10/12

**பெறுநர்:** நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்
**நகல்:** அலுவலக விளம்பரப் பலகை.